### டி.ஆர்.பாலு எம்.பி.- அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை! – கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமை!

# திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் ந.கோபால் அறிக்கை!

திருப்பெரும்புதூர், ஜூன்.14,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஊராட்சி வாரியாக கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள், 100 வாக்காளர்களுக்கு ஒரு முகவர் மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கள ஆய்வுக் கூட்டம் நாளை (15.6.2025-ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகின்றது.

கடந்த 7.6.2025 அன்று நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் தொகுதி மேற்பார்வையாளர்கள் கூட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்கிற கொள்கை முன்னெடுப்பின்படி ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 விழுக்காடு வாக்காளர்களை புதிய உறுப்பினர்களாக இணைத்தல் மற்றும் ஊராட்சி பாக வாரியாக கள ஆய்வுக் கூட்டம் குறித்து கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் வழிக்காட்டுதல் படி கீழ்க்கண்ட நாட்களில் ஊராட்சி பாக வாரியாக ஆய்வு கூட்டம் நடைபெறுகின்றது.

நாளை(15.6.2025-ஞாயிற்றுக் கிழமை) மாலை 3 மணிக்கு இருங்காட்டுக்கோட்டையில் 100 வது பாகத்திலும், மாலை 3.30 மணிக்கு இருங்காட்டுக்கோட்டை 101வது பாகத்திலும்,மாலை 4 மணிக்கு கீவளூர் 96 வது பாகத்திலும், மாலை 4.30 மணிக்கு தண்டலம் 94 வது பாகத்திலும் நடைபெறுகின்றது. அதே போன்று மாலை 5 மணிக்கு தண்டலம் 95வது பாகத்திலும், மாலை 5.30 மணிக்கு மேவளூர்குப்பம் 91 வது பாகத்திலும் மாலை 6 மணிக்கு மேவளூர்குப்பம்92 வது பாகத்திலும், மாலை 6.30 மணிக்கு மேவளூர் குப்பம்93 வது பாகத்திலும் நடைபெறுகின்றது.

இந்த ஆலோசனைக் கூட்டங்களில் கழகப் பொருளாளர்-திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு எம்.பி. மாவட்டக் கழகச் செயலாளர் -அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தர் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே மேற்கண்ட ஊராட்சிகளின் பாகங்களுக்கு உரிய வாக்குச்சாவடி நிலை முகவர்கள், (பி.எல்.ஏ.2),. தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (31 நபர்கள்), 100 வாக்காளர்களுக்கு ஒரு முகர்(பி.எல்.சி.) மற்றும் கிளை செயலாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி நிர்வாகிகள், ஏனைய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இக் கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு செம்மொழி நாள் பொதுக்கூட்டம் பகுதி கழகச் செயலாளர் பேபி சேகர் தலைமையில் திருமுல்லைவாயில் பகுதியில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பல்வேறு நல உதவிகள் வழங்கினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, விருகை சந்தோஷ் ஜெய், நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ஜி.உதயகுமார், சண்.பிரகாஷ், சி.ஜெரால்டு, அமுதாபேபிசேகர், விமல் வர்ஷன், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத் உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ச.பரமசிவம் தலைமை! அண்ணாநகர் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் வி.ஆர்.சதீஷ்குமார் தந்தை

# வி.ரவி படத்திறப்பு! நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் திறந்து வைக்கின்றனர்!

## ந.இராமலிங்கம் – கார்த்திக் மோகன் பங்கேற்பு! மெட்டில்டா கோவிந்தராஜ் – க.கோவிந்தராஜ் – சி.பி.திருமலை முன்னிலை!



சென்னை, ஜூன். 14 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் வி.ஆர்.சதீஷ்குமார், வி.ஆர்.விஜயகுமார் ஆகியோரின் தந்தை வி.ரவி அவர்களின் 16ஆம்நாள்நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (14.06.2025 - சனிக்கிழமை) மாலை 7 மணி அளவில், எண். 40/72 ஏ, எல். ப்ளாக், 23 வது தெரு அண்ணா நகரில் நடைபெறுகிறது.

அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் தலைமையில் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர்.



மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரம், கடப்பேரி ஆகிய பகுதிகளில் ஏரி ஆக்கிரமிக்கபட்டிருப்பதாகக் கூறி நீர்வளத்துறை அதிகாரிகள் நோட்டீஸ் வழங்கி உள்ளனர். இந்நிலையில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அந்த பகுதிக்கு நேரில் சென்று பொதுமக்களைச் சந்தித்து குறைகளை கேட்டு வீடுகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். உடன் 4,வது மண்டல குழுத்தலைவர் பகுதி செயலாளர் டி.காமராஜ் மற்றும் ஜா.ரவிக்குமார், இரா.செல்வகுமார், ஆர்.ஜீவன், செ.சுரேஷ், எம்.வினோத், ஆர்.செல்வகுமார், மா.கன்னியப்பன், பி.காளியப்பன், ஆர்.அகஸ்டின், எம்.சூர்யா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### தொகுதிப் பார்வையாளர் எஸ். மோகன் பங்கேற்பு! வை.ம. அருள்தாசன் தலைமை!

# திருவொற்றியூர் மேற்கு 1, 2, 3, 3 ‘அ’ ஆகிய வட்டங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மு.சிவக்குமார் – டி.சேகர் – மு.மாணிக்கவேலன்– பி.தமிழரசன் ஏற்பாடு!

சென்னை, ஜூன்.14-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் ஆணையேற்று ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை நிலை நிறுத்தி சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 1,2,3 மற்றும் 3(அ) ஆகிய வட்டங்களில் மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலில் இன்று (14.6.2025) சனிக்கிழமை பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில வர்த்தக அணி துணை தலைவர் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எஸ். மோகன் அவர்கள் பங்கேற்று ஆலோசனை வழங்க உள்ளார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் ந. திருசங்கு, இ. குமரவேல், யு. எஸ். குறளரசன் , ஏ. இந்துமதி, எம். வஜ்ரவேல், ஆகியோரின் முன்னிலையில் அந்தந்த வட்டங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

வட்டம் -1 நேரம் மாலை 4:00 மணி, இடம் : காமராஜர் நகர் சமுதாய நலக்கூடம் வட்டக் கழக செயலாளர் மு.சிவக்குமார் எம்.சி ஏற்பாட்டில்

வட்டம்- 2 நேரம் மாலை 5:00 மணி, இடம் : கத்திவாக்கம் மார்க்கெட் கழகப் பணிமனை

வட்டம் 3 மற்றும் 3 (அ), நேரம் மாலை 6 :00 மணி இடம் : அன்னை சிவகாமி நகர் சமுதாய நலக்கூடம்.

இக்கூட்டத்தில் மாநில வர்த்தக அணி துணைத்தலைவர் எஸ். மோகன் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் குறித்தும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்க உள்ளார்.

அது சமயம் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள், BLC மற்றும் சமூக வலைதள பாக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 12–வது வட்டக் கழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் 12வது வட்ட கழக செயலாளர் க.வீ.சதிஷ்குமார் ஏற்பாட்டில் பாக முகவர்கள் BLA2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தொகுதி பொறுப்பாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தி.நகர் எஸ்.மோகன் சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன், டி.ஏ.ராஜ், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், எஸ்.பாஸ்கர், பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், எம்.எல்.சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




ஆறாம் ஆண்டு

நினைவு அஞ்சலி



தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019

கொள்கையில் உறுதி செயலில் துணிவு

சிந்தனையில் தெளிவு

மேம்பட்ட பண்புகளுக்கு சொந்தக்காரர்

பெரியவர் எஸ்.சிவசுப்ரமணியன் M.A.,B.L.,

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்-முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன் :

மாண்புமிகு. சா.சி.சிவசங்கர் BE.,MBA.,

போக்குவரத்து (ம) மின்சாரத்துறை அமைச்சர்

மாவட்ட கழகச் செயலாளர்-அரியலூர்

பாபு சித்தன் Ex.Army

இராயக்கோட்டை

கிருஷ்ணகிரி மாவட்டம்

T.S. முருகேசன் D,Co-op

தினத்தந்தி-மாலைமலர் நிருபர்,

இராயக்கோட்டை கிருஷ்ணகிரி மாவட்டம்





ஆறாம் ஆண்டு

நினைவு அஞ்சலி

தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019



கொள்கையில் உறுதி செயலில் துணிவு

சிந்தனையில் தெளிவு

மேம்பட்ட பண்புகளுக்கு சொந்தக்காரர்

பெரியவர் எஸ்.சிவசுப்ரமணியன்

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன்

எஸ்.ஆர்.இராமராஜன் LLB.,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அரியலூர் மாவட்டம்